# நுவரஎலிய பிரதேச சபை

# நுவரஎலிய மாவட்டம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூலை 17 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 09 திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, நுவரஎலிய பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

---

மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களுடன் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கான அடிப்படையாக கொண்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்ப்ர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,167,335 இனை ரூபா 12,452,309 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நடைமுறை சொத்துக்கள் ரூபா 9,284,974 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 8,386,668 இற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,711,479 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 4,675,189 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அது தவிர மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 2,515,313

இற்கான முத்திரை கட்டணத்தினை ரூபா 3,711,479 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 1,196,166 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 156,576 இனை நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் நடைமுறை பொறுப்புக்கள் அதே தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்கான உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்தின் பங்களிப்புத் தொகையாக செலுத்த வேண்டியிருந்த ரூபா 3,297,221 தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் அதே தொகையால் நிதிக் கூற்றுக்ளில் மிகையாக காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கந்தபொல உப அலுவலகத்தில் பொறியும் பொறித்தொகுதிகளின் பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) உள்ளூராட்சி கணக்கு முறையின் கீழ் ஒவ்வொரு செலவு விடயங்களிலும் மற்றும் ஒவ்வொரு வருமான விடயங்களிலும் கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளின் பொழிப்பு பதிவேடுகளில் இருந்து பெற்றுக் கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனினும் மீளாய்வாண்டிற்கான காசேடு மற்றும் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு தொடர்பாக பொய்யான 19 நாட்குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருந்தது.

(எ) நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ரூபா 39,561,187 தொகை பெறுமதியான 5 கணக்கீட்டு குறைபாடுகள் நடைமுறை ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

சபையில் பேணப்படும் 10 கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகள் மற்றும் குறிப்பிட்ட துணைப்பதிவேடு மீதிகளிடையே ரூபா 42,506,462 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

1.3.4 தொங்கல் கணக்கு

-----------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா 67,129,574 ஆகும்.

1.3.5 பெற வேண்டிய கணக்குகள்

--------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 35,500,472 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ஒரு வருட காலத்தை மிகைத்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,737,200 ஆகும்.

1.3.6 செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 83,939,875 தொகை ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ஒரு வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 71,805,939 ஆகும்.

1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 114,271,974 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளது.

1.3.8 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

--------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4.6 | சபையில் கடமையாற்றிய 09 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 111,932 இற்கான பதவியணிக் கடனை நீண்ட காலம் முதல் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| i. நி.பி. 396(ஈ) | 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டு 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 22,335 தொகை பெறுமதியான 05 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| ii. நி.பி. 371 | 76 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,272,136 பெறுமதியான முற்பணங்களை தீர்த்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,505,649 ஆக

காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,136,840 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகள் ரூபா 2,631,191 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டிற்கான மிகையுடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 33,049,430 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. அத்துடன், அதற்கான 03 வருமான விடயங்களில் குறைவும் மற்றும் 03 செலவு விடயங்களில் அதிகரிப்பும் அடிப்படைக்காரணமாக அமைந்துள்

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு,

| | | | | வருமானம் சேகரித்தல் | | | நிலுவை வருமானம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் | 2014 ஆண்டின் போது பில் போடப் பட்ட வருமானம் | 2014 ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் | 2014 ஆண்டிற்கான பில் போடப் பட்டவைகள் | சேகரிக்கப்ப ட்ட மொத்த வருமானம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானத்தில் இருந்து | 2014 பில் போடப்பட்ட வருமானத்தில் இருந்து | மொத்த நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 5,088,074 | 4,591,701 | 9,679,775 | 2,473,329 | 2,558,148 | 5,031,477 | 2,033,553 | 2,614,745 | 4,604,968 |
| ஏக்கர் வரி | 278,641 | 200,724 | 479,365 | 189,451 | 209,416 | 398,867 | (8,692) | 89,190 | 80,499 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 0 | 4,044,000 | 4,044,000 | - | 4,044,000 | 4,044,000 | 0 | - | - |
| வீட்டு வாடகை | 147,421 | 203,072 | 350,493 | 23,027 | 175,398 | 198,425 | 124,394 | 27,675 | 152,069 |
| கடை வாடகை | 290,026 | 437,523 | 727,549 | 209,600 | 262,337 | 471,937 | 175,186 | 80,427 | 255,612 |
| காணி வரி | 251,743 | 78,070 | 329,813 | 60,239 | 53,580 | 113,819 | 24,490 | 191,503 | 215,994 |
| வாராந்தச் சந்தை | 220,130 | 783,417 | 1,003,547 | 220,130 | 779,042 | 999,172 | 4,375 | - | 4,375 |
| நீர்க் கட்டணம் | 1,352,798 | 1,904,217 | 3,257,015 | 1,085,965 | 779,524 | 1,865,489 | 1,124,693 | 266,833 | 1,391,526 |
| இறைச்சிக் கடை வாடகை | 876,298 | 3,322,935 | 4,199,233 | 750,286 | 3,119,394 | 3,869,680 | 203,541 | 126,012 | 329,553 |

2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த தொகை ரூபா 16,163,788 ஆகும்.

2.3.3 வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணம்

---------------------------------------------------------

வருட ஆரம்பத்தில் முறையின் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் வர்த்தக அனுமதிக் கட்டணம் பில் போடப்பட்டு அறவிடப்பட வேண்டும் அதற்கு பதிலாக சபையினால் சேகரிக்கப்படும் வர்த்தக அனுமதிப்பத்திர கட்டண வருமானம் மாத்திரம் பில் போடப்பட்டிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

---------------------------------------

வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கு இணங்கியமை உறுதிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிருவாக அறிக்கையின் மூலம் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகையினை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

3.2 கொள்வனவுத் திட்டம்

----------------------------------

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 259,960 பெறுமதியான டயர் மற்றும் பெற்றரிகளுக்காக சந்தை பெறுமதியை மிகைத்து ரூபா 50,660 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்று தொடர்பாக 03 சந்தர்ப்பங்களில் செலுத்தியிருந்த ரூபா 103,500 இற்கான தொகையில் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ள 06 நாட்களுக்காக மீண்டும் மீண்டும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமையால் ரூபா 54,000 தொகை ஒன்று மிகையாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான இலக்கம் CPPB-6635 கொண்ட வாகனத்திற்காக 2014 ஜுலை மாதத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக சமர்பிக்கப்பட்டிருந்த ரூபா 12,200 பெறுமதியான வருமான அனுமதிப் பத்திரத்திற்காக முற்பணம் தீர்த்தல் உறுதிச்சான்றுகள் 02 சமர்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 12,200 இற்கான தொகையொன்று மிகையாக பெறப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபையினால் மீபிலிமான தாய்மார் பிணி ஆய்வு நிலைய மேவகை கூடாரம் நிர்மாணிப்பதற்கான நிர்மாண வேலைக்காக ஒரே வேலை விடயத்திற்காக 02 சந்தர்ப்பங்களில் பில் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு ரூபா 183,462 தொகை ஒன்று மிகையாக செலுத்தப்பட்டுள்ளது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

19 செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக ரூபா 891,150 இற்கான முற்பணம் ஒன்று செலுத்தப்பட்டிருந்த போதும், 2014 திசெம்பர் 31 வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

--------------------------------------------------------------------

நானுஓய மற்றும் கந்தபொல நகரங்களில் திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவமத்திற்காக முறையான நடைமுறை ஒன்று கடைபிடித்திருக்கவில்லை. அத்துடன் சுற்றாடல் மாசடையும் விதமாக குப்பைகள் குவிக்கப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது.

4 கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

---------------------------------------------------------

4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

4.2 பாதிட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் நூற்றிற்கு 10 முதல் நூற்றிற்கு 64 வரையும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 26 முதல் நூற்றிற்கு 160 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தறு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.3 அகக் கணக்காய்வு

-----------------------------

நிறுவனத்தில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) சொத்துக்கள் நிருவாகம்